*17*

# இரத்தத்தினால் மீட்கப்பட்டோம்!

## (9:11-28)

*எபிரெயர் 9:11-14 வசனப் பகுதியானது, நமது முந்திய பாடத்தின் பகுதியாக உள்ளது, ஆனால் நமது தற்போதய படிப்பில் இதை உள்ளடக்குவது அவசியமாக உள்ளது. சிலர் இந்த ஐந்து வசனங்களை, எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் திறவுகோல் வசனங்களாகக் கருதுகின்றனர். இவைகள் "எபிரெயருக்கு எழுதிய நிருபத்தின் இருதயம் போன்ற மையப்பகுதி" என்று அழைக்கப் பட்டுள்ளன.*[1]

*"இரத்தத்தினால் மீட்கப்பட்டோம்" என்பது, இந்தப்பாடத்தின் தலைப்பாக உள்ளது! "இரத்தம்" என்ற வார்த்தை நமது வசனப்பகுதியில் பதினோரு முறைகள் காணப்படுகிறது. இத்துடன் கூடுதலாக, இவ்வசனப்பகுதியில் உள்ள - "பலி," "செலுத்துதல்" மற்றும் "மரணம்" போன்ற - மற்ற வார்த்தைகள் இரத்தம் சிந்துதலை மறைமுகமாக உணர்த்துகின்றன.*

*சிலர் ''இரத்தக்கறையான மார்க்கம்'' என்று அழைத்து கிறிஸ்தவ மார்க்கத்தை குறைகூறுகின்றனர். பல ஆண்டுகளுக்கு முன்னர், அமெரிக்காவின் மிகப்புகழ்பெற்ற பெயர்க்குழுக்கூட்டம் ஒன்று, தங்கள் பாடல் புத்தகங்களில் இருந்து "இரத்தம்" என்ற வார்த்தையை நீக்குவதற்கு வாக்கெடுப்பு நடத்திற்று. இருப்பினும், கிறிஸ்தவத்தில் இருந்து இரத்தத்தை நீக்குதல் என்பது, ஒரு கருத்தில் அதிலிருந்து உயிரை நீக்குவதாக உள்ளது (காண்க லேவியராகமம் 17:11). எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர் இட்டுள்ளபடி, "இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" (எபிரெயர் 9:22).*

*நமது வசனப்பகுதியில், பழைய ஏற்பாட்டின் இரத்த பலிகள், இயேசுவின் இரத்த பலியோடு ஒப்பிடப்பட்டும் நேர்மாறாக உடன்படுத்தப் பட்டும் உள்ளன. ஒற்றுமைகள் மற்றும் வேற்றுமைகளைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திக்கும்போது, ஒருவேளை நாம், இரத்தம் சிந்துதலுக்கும் பாவங்கள் மன்னிக்கப் படுதலுக்கும் இடையில் உள்ள உறவை இன்னும் சிறப்பாகப் புரிந்துகொள்வோம்.*

### பழைய உடன்படிக்கை

***சட்டம்***

*தேவனுடன் மனிதகுலத்தின் உறவினுடைய தொடக்கத்தில் இருந்தே, இரத்தம் சிந்துதல் என்பது தேவனுடைய ஏற்பாடாக இருந்தது.*

- *ஆபேல் ஒரு ஆட்டுக்குட்டியைப் பலியாகச் செலுத்தினார் (ஆதியாகமம் 4).*
- *வெள்ளப் பெருக்கிற்குப் பின்னர், நோவா பலிசெலுத்தினார் (ஆதியாகமம் 8).*
- *ஆபிரகாம் தேவனுக்கு பலி செலுத்தும்படி அநேக பலிபீடங்களைக்*

*கட்டினான் (ஆதியாகமம் 12:7, 8; 13:18; 22:9).*

- *பஸ்கா ஆட்டுக்குட்டி ஒரு பலியாக இருந்தது (யாத்திராகமம் 12).*

*“முதலாம் உடன்படிக்கையுடன்” - பழைய ஏற்பாட்டுடன் - தொடர்புடைய வகையில் பலியின் பயன்பாடு என்பது எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரின் விசேஷித்த ஆர்வத்திற்குரிய விஷயமாக இருந்தது (எபிரெயர் 9:18).*

*பத்துக் கட்டளைகளையும் அவற்றுடன் தொடர்புடைய பிரமாணங்களையும் தேவன் கொடுத்த பின்பு, மோசே அவற்றை ஒரு புத்தகத்தில் (தோல் சுருளில்) எழுதினார் (யாத்திராகமம் 24:4). அவர் அவ்வாறு செய்திருந்த வேளையில், இஸ்ரவேல் மக்கள் தேவன் தங்களுக்குக் கட்டளையிட்டிருந்த படியெல்லாம் செய்வதற்கான தங்கள் ஒப்புக்கொடுத்தலை மறு உறுதிப்பாடு செய்தனர். பின்பு எருதுகள் பலியிடப் பட்டன (வசனம் 5). அந்தப் புத்தகத்தின் மீதும், அங்கு கூடிவந்திருந்த இஸ்ரவேல் மக்கள் மீதும்[2] (வசனம் 8; காண்க எபிரெயர் 9:19), மற்றும் ஆசரிப்புக்கூடாரம் மற்றும் அதன் பணிமுட்டுகள் ஆகியவற்றின் மீதும் (காண்க எபிரெயர் 9:21) எருதுகளின் இரத்தம் தெளிக்கப்பட்டது. பின்பு மோசே, “இந்த வார்த்தைகள் யாவையுங்குறித்து கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையின் இரத்தம் இதுவே” என்று கூறினார் (யாத்திராகமம் 24:8).*

*அடுத்துவந்த ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளில், நியாயப்பிரமாணத்தில் கட்டளையிட்டபடி, பல பல இரத்தப்பலிகள் செலுத்தப்பட்டன. “வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய” இரத்தம் சிந்தப்பட்டது (எபிரெயர் 9:12). பலிசெலுத்தப் பட்டிருந்த “கடாரியின் சாம்பலும்” குறிப்பிட்ட சில சுத்திகரிப்புச் சடங்குகளில் பயன்படுத்தப் பட்டிருந்தது (வசனம் 13; காண்க எண்ணாகமம் 19:9). ஒவ்வொரு ஆண்டிலும் பாவநிவாரண நாளின்போது, மிகவும் குறிப்பிடத்தக்கதான இரத்த பலிகள் செலுத்தப் பட்டன (காண்க எபிரெயர் 9:25). நியாயப்பிரமாணத்தின்கீழ், “நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது” என்பதே சட்டமாக இருந்தது (வசனம் 22).*

***காரணம்?***

*விஷயம் ஏன் இவ்வாறு இருந்தது? இதற்கு, நமது வசனப்பகுதியில் 16 மற்றும் 17 ஆகிய வசனங்களில் உள்ள வார்த்தைகளில் ஏற்படுத்தப்பட்ட விளையாட்டுதான், எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவரால் தரப்பட்ட ஒரே விளக்கமாக உள்ளது. முன்பே குறிப்பிட்டபடி, “உடன்படிக்கை” என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, பொதுவாக ஒரு* உயிலைக் *குறிப்பிடப் பயன்படுத்தப் பட்ட சொற்றொடராக இருந்தது. இவ்வார்த்தையின் முதன்மை அர்த்தத்தைப் பயன்படுத்திய எழுத்தாளர், ஒரு கடைசி உயில் அல்லது சாசனம் என்பது, அந்த உயிலை ஏற்படுத்தியவர் மரணம் அடையும் வரையில் செயல்விளைவுக்கு வருவதில்லை என்று குறிப்பிட்டார். ஆகவே அவர், தேவனுக்கும் மனிதருக்கும் இடையிலான உடன்படிக்கையைச் செல்லத்தக்கது ஆக்குவதற்கு, மரணம் அவசியமாக இருந்தது என்று முடிவு செய்தார்.*

*எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், அதற்கு அப்பால் செல்லவில்லை. மிருகங்களைப் பலியிடுதலுக்கு நன்கு பழக்கப் பட்டிருந்த வாசகர்களுக்கு, “ஏன்” என்பதை விளக்குவது அவருக்கு அவசியமாயிருக்கவில்லை. அவர்,*

"... இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது" என்று கூறியபோது (வசனம் 22), அவரது வாசகர்கள் தங்கள் தலைகளை ஆமோதிக்கும் வகையில் அசைத்திருப்பார்கள். இருப்பினும் நம்மில் பலர் அதே பின்னணியைக் கொண்டிருப்பதில்லை. இரத்த பலிகளைத் தேவன் கேட்டது ஏன் என்று சிலர் வியப்படையலாம். தேவன் தமது மனதில் கொண்டுள்ள எல்லாவற்றையும் நாம் அறிய இயலாது (ஏசாயா 55:8, 9), ஆனால் பின்வருவன சில ஆலோசனைகளாக உள்ளன. தேவன் தமது மக்களின்மனங்களில் குறிப்பிட்ட சத்தியங்களைப் பதிக்க விரும்பினார். அவர்கள் பின்வருவனவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்:

- *பாவம் பயங்கரமானதாக உள்ளது.* அது சுலபமாக மன்னிக்கப்படுவதில்லை. நாம் மன்னிக்கப் படுவதற்கு, மரணமும் இரத்தம் சிந்துதலும் இருந்தாக வேண்டும்.
- *தேவன் கிருபையுள்ளவராக இருக்கிறார்.* பாவங்களை மன்னிக்க அவர் தயாராக இருந்தார் - ஆனால் தகுதியான இரத்த பலி செலுத்தப் பட்டிருந்தால்தான் அதை அவர் செய்வார்.
- *இரத்தம் அத்தியாவசியமானதாக உள்ளது.* இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவத்தில் இருந்து மீட்பு இருக்க இயலாது.
- *மிருகங்ளைப் பலி செலுத்துதல் போதுமற்றதாக இருந்தது.* மிருக பலிகள் மீண்டும், மீண்டும் செலுத்தப்பட வேண்டியவையாக இருந்தன (காண்க எபிரெயர் 10:1-3, 11). கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்கால பாவம் யாவற்றையும் நிவர்த்தி செய்யக்கூடிய பூரணப்பட்ட பலியொன்று அவசியமாக இருந்தது (காண்க 10:12). அது நம்மைப் புதிய உடன்படிக்கையினிடம் கொண்டு வருகிறது.

## புதிய உடன்படிக்கை

**நிவாரணம்**

பழைய உடன்படிக்கையின் இரத்த பலிகள் பலவற்றிற்கு நேர் எதிரிடையாக, புதிய உடன்படிக்கையில் ஒரே இரத்த பலிதான் உள்ளது:[3] அது சிலுவையின் மீது இயேசுவின் பலி. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், இந்த பலியை விவரிப்பதற்கு, பாவநிவாரண நாளில் இருந்து வரும் உருவகத்தை பயன்படுத்தினார்.

பாவநிவாரன நாளில் பிரதான ஆசாரியர், மிருகங்களின் இரத்தத்தை எடுத்துக்கொண்டு மகாப் பரிசுத்த ஸ்தலத்திற்குள் சென்று, அதைக் கிருபாசனத்தின் மீது தெளித்தார். அதுபோலவே இயேசு, பரலோகத்தில் உள்ள மகாப் பரிசுத்தஸ்தலத்திற்கு ஏறிச்சென்று (9:24), பரலோகத்தில் உள்ள மகத்துவ ஆசனத்தின் மீது தமது இரத்தத்தைத் தெளித்தார் (வசனங்கள் 11, 12).[4] இருப்பினும் பாவநிவாரண நாளில் செலுத்தப்பட்ட பலிகளைப் போலின்றி, இயேசுவின் பலியானது "ஒரேதரமானதாக" இருந்தது (வசனம் 12; காண்க 7:27; 9:28; 10:10; ரோமர் 6:10; 1 பேதுரு 3:18). இயேசு ஒன்றுக்குப்பின் இன்னொன்றாகப் பலிசெலுத்த, பரலோகத்திற்கும் பூலோகத்திற்குமாக முன்னும் பின்னும் செல்லத் தேவையற்றதாக இருந்தது.

***விளைவுகள்***

*இயேசுவின் பூரணமான பலி நிறைவேற்றியது என்ன? அவர், "அவர் தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை மீட்கும்பொருட்டாக" வந்தார் (எபிரெயர் 9:26). முதலாவது அவரது மரணம், பழைய ஏற்பாட்டுக் காலத்தில் உண்மையுள்ளவர்களாக வாழ்ந்தவர்களுக்கு இரட்சிப்பை உத்தரவாதப் படுத்திற்று (எபிரெயர் 9:15). பழைய ஏற்பாட்டில் மன்னிப்பு இருந்தது; ஆனால் அது ஒரு தற்காலிக மன்னிப்பாக, பிற்பாடு சிலுவையில் இயேசுவின் மரணத்தைச் சார்ந்ததாக இருந்தது.*

*சுவிசேஷத்தின் அழைப்பிற்கு நாம் பதில்செயல் செய்யும்போது, இயேசுவின் மரணமானது, நமது சொந்த இரட்சிப்பை பாதுகாக்கிறது என்ற உண்மை, நமக்கு முதன்மையான ஆர்வத்திற்குரியதாக உள்ளது (வசனம் 15; காண்க 2 தெசலோனிக்கேயர் 2:14). அது நமது குற்ற மனச்சாட்சியைச் சுத்திகரித்து, "ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு" ஊக்குவித்தலை நமக்கு அருளுகிறது (எபிரெயர் 9:14). அது "வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை" (வசனம் 15) அருளுகிறது. மற்றும் இயேசுவின் இரத்தம் புதிய உடன்படிக்கையைச் செல்லத் தக்கது ஆக்குகிறது (வசனம் 17), நமக்காகத் தொடர்ந்து பரிந்துபேசும் இயேசுவை, தேவனுடனான நமது உடன்படிக்கையின் மத்தியஸ்தர் ஆக்குகிறது.*

*நாம் ஒரேதரம் மரிப்பது போன்றே, கிறிஸ்துவும் ஒரேதரம் மரித்தார் என்று குறிப்பிடுவதைக் கொண்டு, நமது வசனப்பகுதி முடிவடைகிறது (வசனங்கள் 27, 28). புரூஸ் அவர்கள் 27 மற்றும் 28 ஆகிய வசனங்களைப் பின்வருமாறு தொகுத்துரைத்தார்: "மனிதர்கள் தெய்வீக ஏற்பாட்டின்படி, ஒரு முறை மரிக்கின்றனர், அவர்களின் விஷயத்தில் மரணத்தைத் தொடர்ந்து நியாயத்தீர்ப்பு வருகிறது. கிறிஸ்து தெய்வீக ஏற்பாட்டின்படி, ஒரு முறை மரித்தார், அவரது மரணத்தைத் தொடர்ந்து அவருடைய மக்கள் யாவருக்கும் இரட்சிப்பு வருகிறது."[5]*

*பல ஆண்டுகளுக்கு முன்னர், எல்லிஸ் லாங் அவர்கள், பிரேசில் நாட்டில் உள்ள சேபவுலோ நகரத்தில், நமது இவ்வசனப்பகுதியின்மீது பிரசங்கித்துக் கொண்டிருந்தார். புதிதாக மனந்திரும்பியிருந்த ஒரு வழக்கறிஞர் எழுந்து நின்று,"இது ஆச்சரியமான விஷயமல்லவா!" என்று வியப்புடன் கூறினார்.[6] நாம் இரட்சிப்பின் சத்தியம் எவ்வளவு ஆச்சரியம் நிறைந்தது என்பதை எப்போதும் உணர்ந்தறிய வேண்டும் என்றும், அது நமது மனங்களில் ஒருக்காலும் சாதாரண இடத்தைக் கொண்டிருக்கக் கூடாது என்றும் நான் ஜெபிக்கிறேன்.*

## போதகருக்குக் குறிப்புகள்

*எபிரெயர் 9:15ம் வசனம் ஒரு அறைகூவலை முன்வைக்கிறது: ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவர்த்தி செய்யும்பொருட்டு ஒரு மரணம் [சிலுவையின்மீது இயேசுவின் மரணம்] நடைபெற்றுள்ளது. "முதலாம் உடன்படிக்கையின்" (பழைய ஏற்பாட்டின்) கீழ் இருந்த ஏவுதல் பெற்ற எழுத்தாளர்கள், தங்கள் பாவங்களைத் தேவன் மன்னித்தார் என்று தெளிவாக நம்பினர் (எடுத்துக்காட்டாகக் காண்க சங்கீதம் 32; 51) என்ற காரணத்தினால், இந்த வார்த்தைகளுக்குக் கவனம் நிறைந்த*

சிந்தனை தேவைப்படுகிறது. இவ்விரு கருத்துக்களையும் ஒப்புரவாக்கும் ஒரு வழி பின்வருமாறு: சங்கீதம் 32 மற்றும் 51 ஆகியவற்றில் உள்ள தாவீதின் வார்த்தைகள் போன்ற வசனப்பகுதிகள், *மனிதரின் நிலைப்பாட்டில்* இருந்து மன்னிப்பு என்பதன் விஷயத்தை முன் வைக்கின்றன. எபிரெயர் 9:15ம் வசனம், *தேவனுடைய நிலைப்பாட்டில்* இருந்து மன்னிப்பு என்பதன் விஷயத்தை முன்வைக்கிறது: பூரணப்பட்ட பலியை இயேசு செலுத்தாத வரையிலும் பாவங்கள் முழுமையாக மற்றும் நிறைவாக மன்னிக்கப்படவில்லை. இருப்பினும் இயேசு *மரிப்பார்* என்பது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் தேவனுடைய சிந்தையில் இருந்தது (காண்க எபேசியர் 3:11; 1 பேதுரு 1:19, 20). ஆகவே அவர், அந்த மரணம் உண்மையிலேயே நிகழ்வதற்கு முன்னரேகூட, பாவங்களை மனச்சான்றின்படி மன்னிக்க முடிந்தது.

தேவனுடைய திட்டத்தில் இரத்தத்தின் முக்கியத்துவம் மீதான கூடுதல் பாடக்கருத்து, மோரிஸ் வோமேக் அவர்களின் "கிறிஸ்துவின் இரத்தம்" என்ற புத்தகத்தில் தரப்பட்டுள்ளது.[7]

---

குறிப்புகள்

[1]Neil R. Lightfoot, ACU extension class on Hebrews taught in Fort Worth, Texas, 12 October 1985. [2]உங்கள் முகத்தில் மோசே இரத்தத்தைத் தெளிப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள். [3]எபிரெயர் 13:15, 16ல் தேவனைத் துதிப்பதும் பிறருக்கு உதவுவதும் தேவனுக்கு நாம் செலுத்தும் பலிகள் என்ற வகையில் குறிப்பிடப் பட்டுள்ளன (மேலும் காண்க ரோமர் 12:1, 2) ஆனால் இவைகள் இரத்த பலிகளாக இருப்பதில்லை. [4]இயேசு உடல்ரீதியான இரத்தத்தைத் தேவனுடைய ஆவிக்குரிய ஆளுகை வட்டாரத்திற்குள் கொண்டு செல்லவில்லை. இது ஒரு உருவக மொழியாக உள்ளது. [5]F. F. Bruce, *The Epistle to the Hebrews* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1964), 222-23. [6]Lightfoot. [7]Morris Womack, "The Blood of Christ," *The Preacher's Periodical* (now *Truth for Today*) (September 1985): 17-19.